## கொபய்கனே பிரதேச சபை

## குருநாகல் மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மே 18 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மே 29 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 25 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடபட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கொபய்கனே பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

-----------------------------------------

(அ) மீளாய்வாண்டிற்கான காணிகள் மற்றும் கட்டிடங்கள் பதிவேட்டின் பிரகாரம் 24,080,238 மீதியொன்று காணப்பட்டதுடன் ரூபா 23,416,048 தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 664,190 பெறுமதியான காணிகள் மற்றும் கட்டிடங்களை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) சமர்ப்பிக்கப்பட்டிருந்த கணக்குகளின் பிரகாரம் நூலகப் புத்தகங்களின் பெறுமதி ரூபா 2,454,204 ஆக காணப்பட்டதுடன், வருடாந்த பண்டக் கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் அவை ரூபா 2,501,434 என காணப்பட்டமையால் நூலகப் புத்தக மீதி ரூபா 47,230 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

1.3.2 நிகழத்தக்க பொறுப்புக்கள்

--------------------------------------------

சபையில் சேவையாற்றி பின்னர் ஓய்வு பெற்றிருந்த ஊழியர்களுக்காக உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை முறைப்படி செலுத்தப்படாமையால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அந் நிதியத்திற்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 490,202 ஆக காணப்பட்டது. அதே போல் சபைக்கான மாதாந்த தவணைப் பணம் என ரூபா 1,204 வீதம்

அந் நிதியத்தினால் அறவிடப்பட்டிருந்த போதிலும் அவ் அறவீடு எந்த ஊழியருடையது என சபை அறிந்திருக்கவில்லை.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு தொடர்பாக இறுதி மீதியின் கீழ் 10 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்குகளின் பிரகாரம் மற்றும் தொடர்புடைய பதிவேடு இடையே ரூபா 26,958,888 இற்கான இணக்கமின்மை காணப்பட்டது.

1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

------------------------------------------------------------------------------------------

(அ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 27,791,085 தொகை ஆகும். அவற்றில் மொத்தமாக 2% ஆகிய ரூபா 639,317 தொகையொன்று 3 வருடங்களை விட மிகையான காலம் முதல் காணப்படும் மீதிகளாகும்.

(ஆ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்குகளின் பெறுமதி ரூபா 25,059,670 தொகையாகும். அவற்றில் மொத்தமாக 4% ஆகிய ரூபா 1,008,511 தொகையொன்று 3 வருடங்களை விட மிகையான காலம் முதல் காணப்படும் மீதிகளாகும்.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

--------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 277,097 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக விரிவான பரிசோதனை ஒன்று மேற்கொள்ள முடியாதிருந்தது.

02. நிதி மீளாய்வு

----------------------

2.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 925,430 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,854,948 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 5,929,518 இற்கான வீழ்ச்சியொன்று காணப்பட்டது. இந்த நிதி விளைவிற்கு ரூபா 25,140,416 இற்கான மூலதன உதவி மற்றும் ரூபா 25,386,091 இற்கான மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போது மீளாய்வாண்டு தொடர்பான நிதி விளைவுகள் ரூபா 679,755 இற்கான மிகையாகியுள்ளது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிச் செயலாற்றுகை

-----------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானமாகிய ரூபா 35,312,914 தொகையில் பொதுவாக 86% தொகை என ரூபா 30,334,787 தொகையும் சபையினால் உருவாக்கிய வருமானம் அல்லாத நீதிமன்றத் தண்டப் பணம், முத்திரைக் கட்டணம், சம்பள மீளளிப்பு போன்ற படிகள் தன்மையுள்ள பெறுவனவுகளினை அடக்கியுள்ளது. மூலதன வருமானமாகிய ரூபா 25,140,416 இற்கான மொத்தத் தொகையும் கமநெகும, மகநெகும போன்ற மூலங்களின் மீது வேறு நிறுவனங்களின் மூலம் அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி விடயங்களுக்கு கிடைக்கப்பெற்ற பணத்தினை அடக்கியுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவு ஆகிய ரூபா 34,387,484 தொகையில் மொத்தமாக 59% என ரூபா 20,210,619 தொகை தனிப்பட்ட சம்பளங்களுக்கான செலவுகளாகக் காணப்பட்டதுடன் அவற்றில் மொத்தமாக 89% ஆகிய ரூபா 18,003,876 இற்கான சம்பள மீளளிப்பு என உள்ளூராட்சி ஆணையாளரினால் வழங்கப்பட்டிருந்தது. அப் பெறுமதி ஏனைய வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதே போல் மூலதன செலவு ஆகிய ரூபா 25,386,091 தொகையில் இருந்து மொத்தமாக சுமார் நூற்றிற்கு 1 என ரூபா 82,041 தொகை மாத்திரம் சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்ததுடன் மொத்தமாக 99% ஆகிய ரூபா 25,304,050 இற்கான தொகை கமநெகும, மகநெகும ஆகிய மூலங்களின் மீது வேறு நிறுவனங்களின் ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி விடயங்களை அடக்கியுள்ளது.

2.3 வருமான நிருவாகம்

-----------------------------------

2.3.1 அனுமதிப்பத்திரக் கட்டணம்

-----------------------------------------------

மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 209,090 தொகை வருட இறுதியிலும் அறவீடு செய்திருக்கவில்லை. இது தொடர்பாக காலப்பகுப்பாய்வு ஒன்றும் காணப்படவில்லை.

2.3.2 ஏனைய வருமானங்கள்

-----------------------------------------

(அ) மீளாய்வாண்டிற்கான ஏனைய வருமானங்களின் கீழ் சேவைக் கட்டணமாக ரூபா 4,137,000 தொகையொன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் ஆண்டிற்கான பில் போடப்பட்டவைகள் ரூபா 2,505,212 தொகை என மொத்தமாக 60% ஆக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பில் போடப்பட்டவையாகிய ரூபா 2,505,212 தொகையின் முழுத் தொகையும் நிலுவையாகக் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் சேவைக் கட்டணம் ரூபா 3,903,926 ஆக காணப்பட்டதுடன் ஆண்டின் போது ரூபா 1,838,531 தொகை என மொத்தமாக 47% மாத்திரம் அறவீடு செய்யப்பட்டிருந்தது. நிலுவையாகக் காணப்பட்ட மீதி ரூபா 2,065,395 தொகை என மொத்தமாக 53% ஆகக் காணப்பட்டது.

03. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

3.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

-------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு இறுதி வரை ஏட்டுப் பெறுமதி ரூபா 370,850 ஆகிய நிலையான சொத்துக்கள் பயன்படுத்தப்படாது காணப்பட்டது.

04. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) குப்பை முகாமைத்துவம்